**செ.வெ.எண்.41** **நாள்:20.02.2016**

**இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.113 இலட்சம் மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்**

.............

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் ரூ.113 இலட்சம் மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப. அவர்கள் இன்று(20.02.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். திருப்புல்லாணியில் ஒருங்கிணைந்த பள்ளி கட்டிடம் சீரமைப்பு திட்டத்தின்கீழ் ரூ.22.16 இலட்சம் மதிப்பில் 2 பள்ளி கட்டிடங்கள் கட்டும் பணியையும், ரூ.15 இலட்சம் மதிப்பில் தன்னிறைவு திட்டத்தின்கீழ் பொன்னாங்கனிகானல் ஓடையில் தடுப்பனை மற்றும் படித்துறை, தடுப்புச்சுவர் கட்டும்பணியையும், காஞ்சிரங்குடி கிராமத்தில் ரூ.14.55 இலட்சம் மதிப்பில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் கிராம ஊராட்சி சேவை மையம் கட்டும் பணியையும், ரூ.28.60 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் காஞ்சிரங்குடி முதல் பக்கிரப்பா தர்கா வழியாக முத்தரையர் நகர் வரை செல்லும் சாலையில் தார் பரப்பி பராமரிப்பு செய்யும் பணியையும், பத்திராதரவை கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் கட்டும் பணியையும், ரூ.2.10 இலட்சம் மதிப்பில் முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் பசுமை வீடுகள் கட்டும் பணியையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதேபோல, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் தலா ரூ.12 ஆயிரம் மதிப்பில் 2 தனிநபர் இல்ல கழிப்பறை கட்டும் பணியையும், ரூ.17 இலட்சம் மதிப்பில் கிராம ஊராட்சி சேவை மையம் கட்டிடம் கட்டும் பணியையும், ரூ.75 ஆயிரம் மதிப்பில் சக்திபுரம் கிராமத்தில் பால் மற்றும் சிப்பி காளான் குடில் அமைக்கும் பணியையும், ரூ.40 ஆயிரம் மதிப்பில் தனிநபர் விவசாய நிலத்தில் உறைகிணறு அமைக்கும் பணியையும், ரூ.18ஆயிரம் மதிப்பில் தனிநபர் விவசாய நிலத்தினை சமப்படுத்தி காய்கறி விவசாயத்திற்காக பந்தல் அமைக்கும் பணியையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.ஆக மொத்தம் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடைபெற்று வரும் ரூ.113 இலட்சம்மதிப்பிலான பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, ஊரக வளர்ச்சி முகமையின் உதவி செயற்பொறியாளர் திரு.பாபு, உதவி பொறியாளர்கள் திரு.கே.கேசவன், திருமதி.ஹேமலதா மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

.......................................

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்

படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.